


# காமதேன

# காமதேனு

## தமிழ் சமூகப் படம்

### நடிகர்கள்

---

| | |
|---|---|
| ஸ்ரீமதி வத்ஸலா | ... அனுராதா |
| பேபி ஸரோஜா | ... காமதேனு & சண்டி (பாப்பாயி மகன்) |
| ஜி. சுப்புலக்ஷ்மி | ... பாப்பாயி |
| கே. என். கமலம் | ... லேடி டாக்டர் கமலாபாய் |
| கே. பி. வத்ஸல் | ... சந்திரமோஹன் |
| ஜி. பட்டு ஐயர் | ... ஜமீன்தார் ஸர் வஸந்த ராஜா |
| எம். ஆர். எஸ். மணி | ... துரைசாமி |
| ஸி. என். சதாசிவம் | ... புரொபஸர் ரெங்கசாமி |
| ஜாலி கிட்டு ஐயர் | ... ஹெட் குமாஸ்தா |
| எஸ். ராமச்சந்திர அய்யர் | ... காலேஜ் ப்ரின்ஸிபால் |
| கோளத்து மணி | ... மோட்டார் ட்ரைவர் |
| மாஸ்டர் பாலசந்தர் | ... ராஜு (ஹோட்டல் பையன்) |
| எஸ். வி. வெங்கட்ராமன் | ... ஸாது |
| ஜி. வி. சர்மா | ... வக்கீல் |

மற்றும்

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன்

உப நடிகர்கள்

---

குறிப்பு :— "காமதேனு" படத்தில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்கள். யாரையும் குறிப்பிடுபவை யல்ல.

# காமதேனு

## கதைச் சுருக்கம்

பீளமேடு ஜமீன்தார் ஸர் வஸந்த ராஜா பெருத்த செல்வம் படைத்தவர். மிகுந்த ஆடம்பரத்துடன் இருந்து வருபவர். தமது குடும்ப கௌரவம், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் எதற்கும் அணுவளவு பங்கம் ஏற்பட்டாலும் சகிக்க மாட்டாதவர். அவருடைய ஏக புத்திரனான சந்திரமோஹன் என்னும் இளைஞன் சென்னையில் நகர உயர்தர கலாசாலையில் படித்து வருகிறான். ஜமீன்தார்கள் சங்கத்திலிருந்து கிடைக்கும் திரவ்ய சகாயத்தினால் நடத்தப்படும் பல ஸ்தாபனங்களில், இந்தக் கலாசாலையும் ஒன்று. வருஷந் தோறும் ஒரு பெருந் தொகை இதன் நிர்வாகத்துக்காக அப்படிக் கிடைத்து வந்தது.

இந்தக் கலாசாலையில், ரெங்கசாமி என்னும் ஆசிரியர் தங்கமான குணமும், பொது நோக்கமும் கொண்ட கல்விமான். அவருக்கு அநுராதா என்னும் ஒரே புதல்வி. அவள் யௌவன பருவத்தை அடைந்து, சௌந்தரியத்துடன் பிரகாசிக்கிறாள். அவளும் அதே கலாசாலையில் சந்திரமோஹன் வாசிக்கும் அதே வகுப்பில் கல்வி கற்று வருகிறாள்.

அவர்களுடன் கூடவே, துரைசாமி என்னும் மாணவனும் படிக்கிறான். அநுராதாவும் சந்திரமோஹனும் ஒருவருக்கொருவர் பிரேமையுடன் பழகி வருவது இவனுக்கு பொறாமையை மூட்டுகிறது. தானே அநுராதாவின் இதயத்தைக் கவர்ந்து கொள்ள வேண்டுமென்று எண்ணி முயற்சி செய்கிறான். ஆனால் மன உறுதியுடன் கூடிய அநுராதா அவனுக்கு இடம் அளிக்கவில்லை. அவனுடைய முயற்சிகளை அவள் வெறுக்கிறாள். இந்த ஏமாற்றம் அவனுடைய மனத்தில் பொறாமைத் தீயை இன்னும் வளர்க்கிறது. அவர்கள் இருவர் மீதும் பழி தீர்த்துக் கொள்வதென்று தீர்மானித்து, அவர்களுடைய காதலை ரெங்கசாமிக்கு வெளிப்படுத்துகிறான். அதனால் ஒரு பலனும் கிடைக்காமல் போகவே, ஜமீந்தாருக்கே ஒரு கடிதத்தில் விவரமாகச் சந்திரமோஹனைப் பற்றி அவதூறுகளை எழுதி விடுகிறான்.

ஜமீன்தாரின் ரௌத்திரம் எல்லை கடந்ததா யிருக்கிறது. மோஹனை வருவித்துக் கண்டிக்கிறார்; தாம் வேறு இடத்தில் பெண் நிச்சயித்திருப்பதாகக் கூறுகிறார். அந்தக் கலாசாலைக்குத் தாம் இனி [illegible]யங்கரா யிருப்பதில்லை யென்கிறார். ஆனால் மோஹன் பிடிவாத[illegible]க அநுராதாவைத் தவிர யாரையும் மணக்க முடியாதென்கிறான். அதனால் ஜமீன்தார் தமது மகனை வீட்டை விட்டு வெளியேற்றி விடுகிறார்!

ஜமீன்தாருடைய தந்தியை ஆதாரமாகக் கொண்டு, கலாசாலைத் தலைவர், புரொபஸர் ரெங்கசாமியை யாதொரு காரணமு மின்றி உத்தி

யோகத்திலிருந்து நீக்கி விடுகிறார். மனம் ஒடிந்து அவ... கிறார். இப்போது அநுராதா, தன்னந் தனியாக, தன் கா... உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள்.

துஷ்டனான துரைசாமி, அநுராதாவை பலவந்தமாகத் தூக்கிச் சென்று விட, ஒருவனை அமர்த்துகிறான். அவன் வரும் சமயம் அநுராதா ஆஸ்பத்திரியில் தந்தைக்குச் சிசுருஷை செய்துகொண்டிருக்கிறாள். ஆகவே, அநுராதாவுக்குப் பதிலாக, அவளுடைய தூர பந்துவான பாப்பாயி என்னும் பெண்ணைத் தூக்கிச் சென்று விடுகிறான். பாப்பாயி பரம ஏழை; அநுராதாவின் வீட்டில் தங்கி யிருப்பவள். அவளைக் கண்டால் துரைசாமிக்குச் சற்றும் பிடிக்காது; ஆனால் பாப்பாயி இப்போது அவனை விடத் தயாராக இல்லை. அவள் பிடிவாதத்தின்மேல், அவர்கள் இருவரும் ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். மனதில் கெட்ட நோக்குடன், துரைசாமி வேண்டுமென்றே தன் பெயர் வஸந்த ராஜ சந்திரமோஹன் என்று ஸர்ட்டிபிகேட்டில் பதிவு செய்து கொள்கிறான்.

வீட்டை விட்டு வெளியேறிய சந்திரமோஹன் அநுராதாவுடன் இல்வாழ்க்கை நடத்துகிறான். காலக் கிரமத்தில் அவர்கள் அன்புக்கு அறிகுறியாக ஒரு பெண் குழந்தையும் பிறக்கிறது. குழந்தைக்குக் காமதேனு என்று பெயரிடுகிறார்கள்.

வருஷங்கள் பல செல்கின்றன. சந்திரமோஹனுக்கு உத்தியோகம் எதுவும் கிடைக்க வில்லை. அநுராதாவும் நோய்வாய்ப் படுகிறாள். அந்தக் குடும்பத்தின் ஆனந்தம் காமதேனு ஒருத்திதான்.

இந்த சமயத்தில் துரைசாமியும் பாப்பாயியும் தங்கள் புத்திரன் சண்டி என்னும் பையனுடன் சமீபத்திலிருந்த ஒரு நகரத்தில் ஒரு ஹோட்டல் வைத்து நடத்துகிறார்கள். ஒரு சமயம் அந்த ஹோட்டலில் தங்கிய ஒரு லேடி டாக்டர், ராஜு என்னும் சேவகச் சிறுவன் அனாவசியமாக வெல்லாம் துன்புறுத்தப்படுவதைக் கண்டு, அவன்மீது இரக்கம் கொள்கிறாள். தன்னுடன் சென்னைக்கு அவனை அழைத்துச் செல்லுகிறாள். சந்திரமோஹனுடைய ஜாகைக்கு வெகு சமீபத்திலேயே வசிக்கிறாள் இந்த டாக்டர். இந்தப் பையன் ராஜுவும், முன்னதாகவே காமதேனுவுக்குத் தெரிந்தவன். ஆகவே ராஜு ஒரு நாள் அவளை லேடி டாக்டர் வீட்டுக்கு அழைத்துச் செல்ல, அப்போது காமு அவளைத் தன் வீட்டுக்கு வரும்படி அழைக்கிறாள்.

அது முதலே அந்த லேடி டாக்டர் சந்திரமோஹன் வீட்டுக்கு அடிக்கடி வருகிறாள். அநுராதாவின் தேக நிலையைக் கண்டு, சுத்த பசும் பாலையே அவளுக்குக் கொடுக்கும்படி கூறுகிறாள். தந்தையை மறுபடி கண்டு உதவி கேட்க முயன்ற சந்திரமோஹன், காரியம்

கை...டாமல் மனம் குழம்பித் திரும்பி வருகிறான். இங்குமங்கும் அலைந்து, கடைசியில் துரைசாமியிடம் வருகிறான். துரைசாமி இப் ... சேர்க்கும் உத்தியோகஸ்தனாயிருக்கிறான். சந்திரமோஹனையும் சைன்யத்தில் சேர்த்து விடுகிறான்.

இப்போது அநுராதாவும் காமுவும் நிர்க்கதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆறுதல் கூற லேடி டாக்டரையும் ராஜுவையும் தவிர வேறு யாருமில்லை. காமதேனுவின் இன்ப வதனமும் ஆறுதல் வார்த்தைகளுமே இந்த மகத்தான துக்கத்தைத் தாங்க அவளுக்குச் சக்தி தருகின்றன.

தன் மகன் போய் விட்டான் என்று அறிந்த ஜமீன்தாரின் மனத்திலும் ஒரு விசேஷ மாறுதல் ஏற்படுகிறது. காமுவையும் அநுராதாவையும் தமது எஸ்டேட்டிற்கு அழைத்து வருகிறார். காமுவே அதற்... குமாரி—தெய்வம்—என்று மதிக்கப்படுகிறாள். எல்லா வேலை...யும் காமு அன்புடன் நடத்துகிறாள். அவள் அன்பு நிறைந்த பார்வை...ம் மந்தகாசமுமே, அவர்கள் வாழ்க்கையில் மாறுதல் உண்டாகி யிருப்பதாகத் தோன்றச் செய்தது. வயிர நெஞ்சம் படைத்த ஜமீன்தார்கூட, இப்போது காமுவின் சொல்படி யெல்லாம் நடந்து கொள்ளலானார். அவருடைய நடை முறைகளிலும் குணத்திலுமே இப்போது திடீரென்று வேறுபாடுகள் காணப்பட்டன.

துரைசாமியும் பாப்பாயியும் அவர்கள் சொத்துக்கள் கரைந்து போய், தரித்திரர்களாகின்றனர். ஜமீன்தாருடைய தனத்தை அபகரிக்க துரைசாமி ஒரு தந்திரம் செய்கிறான். ஒரு வக்கீலையும், பாப்பாயியையும் அவள் குழந்தை சண்டியையும் அழைத்துக் கொண்டு, பீளமேடுக்கு அனுப்புகிறான். தான் சந்திரமோஹனுடைய மனைவியென்றும், சண்டியே சொத்துக்களுக்கு உரிமை பெற்ற வாரிஸு என்றும் பாப்பாயி ஒரு புரட்டைக் கிளப்புகிறாள். ஏக அமர்க்களம் செய்கிறாள்.

ஜமீன்தார் உண்மையிலேயே கலங்கி விடுகிறார். என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. காமுவின் மீதுள்ள வாஞ்சையோ, வேறொருத்தனை வாரிஸாக ஏற்றுக் கொள்ள இடம் கொடுக்க மாட்டேனென்கிறது. ஊர் வம்புக்கு பயந்து, யாரும் அறியாமல் அநுராதாவும் காமுவும் ஊரை விட்டுப் போய் விடுகின்றனர்.

எவ்வாறு குடும்பம் மீண்டும் ஒன்று சேருகிறது, சந்திரமோஹன் உண்மையில் என்னவானான் ஆகிய விவரங்களைத் திரையில் காண்க.

# KAMADENU

*A TAMIL SOCIAL PICTURE*

## SYNOPSIS

THE Zemindar of Peelmed is a proud man imbued with strict and disciplined ideas, and notions of tradition, prestige, and custom. His only son, Chandramohan, a lovable youth of broad views, studies in the City College. This institution among many others is mainly sponsored and patronised by the Zemindar's Association with a contribution of a huge sum annually.

In the same class with Chandramohan, studies the fair Anuradha, only daughter of Professor Rengasami of the same college. The Professor is a straightforward [illegible] sociable man of cosmopolitan ideas.

Doraiswami, another student, looks upon the growing intimacy of the young pair with jealous eyes. His jealousy takes a vicious turn when his own overtures to Anuradha are met with contemptuous results. Failing to coerce Professor Rengasami to his own way of thinking, Doraisami writes a letter to the Zemindar exposing Mohan with shocking details of his college life.

The letter does the intended havoc. The Zemindar's ire is set alight. He calls back Mohan, creates a scene with his wild imprecations about disinheriting him and withdrawing his patronage of the institution if he had anything to do with Anuradha. Mohan persists in his declaration of love to Anuradha with the result that he is peremptorily dismissed from his home.

The evil effects of the Zemindar's rage do not stop here. Professor Rengasami gets the sack of his office and in a distracted state he is borne to the hospital where he expires. Anuradha, now destitute, waits for her lover to come and fulfil his promise.

Doraisami is by no means inactive. He engages Mowali to kidnap Anuradha. This man visits her house for this purpose and carries away Pappayi, a poor and distant

relativ... of Anuradha. Pappayi takes advantage ... forces Doraiswami to marry her. The marriage is solemnised in a registrar's office and a marriage certificate is obtained between Pappayi and Vasantha Raja Chandramohan, according to vicious motives of Doraisami.

In the meantime, Chandramohan comes to his beloved Anuradha and sets up a family. Their union is blessed with a child, Kamadenu.

Years roll on. Kamu grows up into a little girl casting a beam of joy and hope in the hearts of her parents. Chandramohan is unemployed; to add to it, Anuradha is sick in bed and to mitigate their woes, Kamu's presence alone is equal.

Pappayi and Doraisami conduct a hotel at a town near by. A Lady doctor who stays for a day in that hotel accidentally witnesses a little boy, Raju by name, subjected to severe punishment. She takes pity on him and takes him with her. This boy happens to be an old friend of Kamu and on his invitation she goes to the Lady doctor's house to attend a magic lantern lecture.

From that time the doctor visits Kamu's house. She examines Anuradha and advises pure cow's milk to her. Chandramohan determines to make a last attempt with his father but again he is disappointed. The resulting failure depresses him and his wanderings take him to Doraisami who is now a recruiting Officer. Acting upon his advice, Mohan recruits himself in the army.

Anuradha and Kamu are now destitute. Anuradha is in a state bordering upon distraction at the unexpected conduct of her husband. Taking advantage of the helpless position of Anuradha, Doraisami comes with no honourable intention and tries by violent means to accomplish it. But the timely appearance of Kamu coupled with her active whipping, drives the villain away.

The news of Mohan's enlisting makes a change in the outlook of the old Zemindar. He feels penitent for his severity towards his son and invites Kamu to his estate. Anuradha

lives in a separate dwelling near by. Kamu is now the presiding angel and her kindness and benevolance infuses an atmosphere of cheerfulness and happiness among all the domestics of the household.

Even the Zemindar is caught in that influence and his actions are no more characterised by severity or ill temper. To please his grand-child, he shows sympathy and moderation in all his dealings.

Meanwhile, Doraisami and Pappayi have squandered all their property and they make up their minds to earn a living by their wits. Accordingly Pappayi goes with her little son Chandi and a vakil to the presence of the Zemindar and threatens to put forth a claim that she is the [illegible] and Chandi the son of Mohan and that the latter is the lawful heir to the estate.

Confused and perturbed, the Zemindar is in no enviable state of mind; his affection for Kamu is so deep that he would not tolerate any intervention. To avoid public scandal, Anuradha and Kamu secretly leave the home in a car relinquishing their right of their own accord.

What happens to the impostors and how the family is once again re-united are revealed in the concluding part of the story.

# "காமதேனு" பாடல்கள்

---

## 1. அனுராதா

### ஹிந்துஸ்தானி மெட்டு

அனுராதா : நான் எதிர் பார்த்த நற்காலம்
தானாய் வந்ததின் நேரம்
மனம் போல் இனிமேல் நானே
அனுதின மிங்கே நடப்பேனே—தேடி
கும்பிடப் போனதோர் தெய்வம்
அதுதான் எதிர் வந்தது போலே
சேர்ந்ததினாலே சிறிது மஞ்சாதே
சுக மோடே இருப்பேனே

## 2. அனுராதா & சந்திரமோஹன்

### ஹிந்துஸ்தானி மெட்டு

அனுராதா : மதனா பாராய் மகிழ் சிங்காரா
சந்திரமோஹன் : மன மோஹன மானஸ தேவீ
அனுராதா : மனக் கோயிலிலே வாழ் மந்தாரா
சந்திரமோஹன் : அஞ்சொல் ஆரமு தாகும்
அனுராதா : கொஞ்சும் பார்வை அமோஹம்
அனு & சந்திர : மிஞ்சும் பேரகா போகமும் நாமே
மாசுக வாரிதி ஆழ்வோம், நிதம் வாழ்வோம்
அனுராதா : உடல் இரண்டாயினும் ஒருயிர் நாமே
திட மிதவே பிரியோமே இனி நாமே
சந்திரமோஹன் : நிஜமாய்
அனுராதா : மாறாதே
சந்திரமோஹன் : நிதியே
அனுராதா : கெதிநீர் தானே
சந்திரமோஹன் : மதிவதனாளே
அனுராதா : யார்நிக ராவரோ
சந்திரமோஹன் : பாரெனையே
அனுராதா : பாக்யமிதே

சந்திரமோஹன் : பரமானந்த சுகம்

அனு & சந்திர : பரமானந்த சுகம்

சந்திர : ரதி நீயே

அனுராதா : பதி நீரே

சந்திர & அனு : ரமிப்போம் இனி போவோம்

அனுராதா : ஆ ஆ ஆ

சந்திர : அனுராதா

## 3. அனுராதா & சந்திரமோஹன்

சந்திர : அந்தரங்க வாழ்க்கையே
ஆகுமோர் கிளையு மிங்கையே

அனுராதா : ஆஹா அதில் பார் ஜோடியே

அனு & சந்திர : அந்தரங்க வாழ்க்கையே

அனுராதா : நிழல் வெயில்கள் போலவே
துன்ப ஸுகம் துடர்ந்திடும்
உள்ளன்பு குன்றி டாமலே

அனு & சந்திர : அந்த ரங்க வாழ்க்கையே

அனுராதா : மெய் இன்பவாரி மூழ்குவோம்
ஓர் பேதமின்றி வாழுவோம்

சந்திர : மலர்ந்த காதல் மென் மலர்
கலந்த திவ்ய கந்தம் நீ

அனுராதா : என்னுடல் ஆவி யாவும் நீ
இங்கெனக் கென்றும் வேறில்லையே
உன்னுடன் வாழ்வே ஸ்வர்க்கமே
உன்னைப் பிரிந்தால் துக்கமே

அனு & சந்திர : இன்றும் என்றும் இன்பமே
பேரின்பம் நிறைந்த வாழ்விலே
ஒற்றுமை யாக வாழ்விலே
இன்றும் என்றும் இன்பமே

## 4. அனுராதா & சந்திரமோஹன்

அனுராதா : வாராய் வாராய்
வாராய் வாராய் மோஹனா
எங்கு மறைந்தனை மோஹனா

இங்குனையே நினைந்தென் மனம் வாட
என்னை மறந்தனை மோஹனா (வாராய்)

ப்ரேமை கலந்தவர் உறங்கும் அதிசயம்
நானறியேன் உயர் நாயகா
மாயமொ டென்மனம்—கொள்ளை கொள்ளுமுனை
நான் மறவாதவள் தூயவா

சந்திரமோஹன் : உன் நினைவெனுமோர் யோகமலாமல்
கண்ணுறங்கேன் எழில் பாவையே

அனுராதா : அன்பரின் தீங்குரலீதே
இனிபோதும் எழுந்திரும்—அன்பரே

சந்திரமோஹன் : இன்பமே

அனுராதா : அன்பரே

சந்திரமோஹன் : இன்பமே

அனுராதா : தேடியலைந்தேன் உன் பிரிவால் மனம்
வாடினேன் மார ஒய்யாரனே

சந்திரமோஹன் : அதையறிவேன்

அனுராதா : இது முறையோ

அனு & சந்திர : இனி அன்பு கலந்திடுவோம்

## 5. பாப்பாயி

பட்டாடை பணி ஜோராய் நானே
அழகாய் அணிகுவேன்
மட்டார் குழல் மலரும் மணமுமே
தட்டா தெனை விரும்பும் எவருமே (பட்)

வசீகர மதிலே யாரும் நிகரது பாரிலிலை முக
வசீகர மதிலே மனமிசைந்தனரே
யார் வருவாரோ அறியேன்
நான் அவருடன் சுகமாய்
வாழ்ந்திடும் நாளில் நலமாய்
ஸதா என்னுடனே ஸரஸ முடனே
சிங்காரமாய் விளையாடி
இருந்திடச் செய்குவேன்—நானே தானே
உலகினில் மிகவே உயர்ந்தவள் ஆவேன்

## 6. பாப்பாயி

மதிவதனனே வாராய் என் துரையே
மாரன் லீலே புரிவோம்
மாது நானினியே உன்னையேதான்
பிரியமனம் ஸகியேனே
காதலானேன் ஆதாவும் நீ
மலரும் மணம் போல்
மன்ஞ நாம் இனிமேல்
வாழ்வோம் நாளும் வருவாய்
மஞ்சமீதிருவரும் மகிழ்வோம் கூடி
கொஞ்சிடத் தாமதம் ஏனே
வஞ்சி நானே கொஞ்சினேனே
தஞ்சம் நீயே அறிவாய்

## 7. அனுராதா

தாயே ... தாயே
ஆளாய் ஸ்ரீ ஜெகதம்பா தாயே
தாளேன் நான் இனிமேலே என்னை (ஆளாய்)

தஞ்சம் வேறே அறியேன் நிதி
தருவாய் நெஞ்சில் திருவருள் ஜோதி
துயரம் என்னும் இருள் அறுமோ பீதி
எண்ணுவதெதுவும் நிறை வேறுது
மாயா வாழ்வில் நொந்திடும் என்னை
கண்பார்த்தின்னருள் தந்தென்றன்னை (ஆளாய்)

## 8. சந்திரமோஹன்–அனுராதா—கோரஸ்

அனுராதா : நானுன்கை வேணுகான முரளி
சந்திர : என் ராதாமணி ரதியே ப்ரியே
அனுராதா : ஸ்ரீ கிருஷ்ணகுண - மெய் ராதாவென
மானிலமீதினிலே பால் பானை தாங்கியே
நான் வரும் வேளையில் மாயா விநோதமாய்
மாதென்னுள்ளத்தையே நீ கொள்ளை கொண்டாய்
சந்திர : மெய்தானே உனதன்பே பெறவே

அனுராதா : எப்போதும் இனி ஏகாந்த மொடு
எழிலாக இருந்தே மகிழ்ந்தே-நாம்
மனோலய மொடு கூடுவோமே

கோ[illegible] : நாமேதானின்றே பார்த்தே-நடத்துவோமே கூத்தே
நன்றாகவே பார்த்தே-நம் கோகுலபாலன்
நாடாளும் நந்தகோபன் காக்ஷி
நாதா வேதா ஜேய் வரதா
நவநீதா ராதா நாதா
ஷோக்கு ஷோக்கு கைலாக்கே
பாக்கப் பாக்க நல்லாக்கே
டாக்கு டீக்கு ஜில்லாக்கே
தாளமேளம் டம்டும்கே
தாக்குதை தாக்குதை தாக்குதை
நாடாளும் நந்தகோபன் காக்ஷி
[illegible] வேதா ஜேய்வரதா
நவநீதா ராதா நாதா

## 9. அனுராதா & சந்திரமோஹன்

அனுராதா : கண்டு கண்டு மகிழ்ந்தாடுவாய்—மனமே கொண்டாடு
பிர்மானந்தம் ஸ—ஸ்வரமோடு—ஸரிகாம பாதாநீஸா
பாடு மாங்குயில் கானம் கேளாய்—ஆடும் தோகை மயில்
என் மனமே கொண்டாடு (கண்டு)

ஓம் ஓம் என்று நாதம் முழங்க
ஓயா திறைவன் வைபவம் பாடும்
நீராடும் கரையின்றிப் பொங்கும்
போராழித்திறையே
என் மனமே கொண்டாடு (கண்டு)

சந்திர : பகலின் தாபம் தணியவும் இன்பம்
பொழியும் சீத சந்திரிகையாலே
பூர்ணசந்திரன் பார்—பூர்ணசந்திரன்பார்
என்மனமே கொண்டாடு (கண்டு)

அனுராதா : அற்புத வாழ்விற்குவமை எது
புவியில் வானில் உவமை எது
ப்ரேமை கொண்டாலே—உண்மை
ப்ரேமை கொண்டாலே—
என் மனமே கொண்டாடு (கண்டு)

## 10. அனுராதா & காமதேனு

அனுராதா : கண்வளர் மணியே என் கண்ணே
தாலோ தாலேலோ நீ தாலோ தாலேலோ
தேனே கனியே தெய்வ விருந்தே
என்குலம் தழைக்க வந்திடும் கொழுந்தே
என் கலிதீர இன்பம் தந்தாய்
இளநகை குழந்தாய் தாலோ தாலேலோ

காமதேனு : என்னை ஈன்ற என் அன்னை அல்லதோர்
தெய்வம் எதையும் அறியேனே
அம்மா எனது தாயே உடன் நீயே வருவாயே

அனுராதா : என்றன் கண்ணே வாராய் வாராய்
என்றன் ஆருயிரே

காமதேனு : தாயே சொல்வாய் பெரிதெது உலகில்

அனுராதா & காமதேனு :
தேவியின் பதம் பணிவோம்

## 11. பாப்பாயி, ராஜு, சண்டி & மற்றவர்

பாப்பாயி : வந்தனம் ஸார் எனை மறந்தீரோ
கமான் கமான் உள்ளே போங்கள்
ஹலோ ஸார் கமான் ஸார் ஸிட்டவுன் ஸார்

ராஜு : சூடான இட்லி ஸாம்பார்
தோசை சட்னி வேண்டுமா
மெதுவடை கரமாய் தயிர்வடை தாவா
ஹலோ ஸார் கமான் ஸார் ஸிட்டவுன் ஸார்

சண்டி : ஹாட்டான மைசூர் பாக்கு
ஜாங்கரி கொண்டு வரட்டுமா
ஐஸ் க்ரீம் ஒரு பிளேட் ப்ருட்ஸாலடிதோ
ஹலோ ஸார் கமான் ஸார் ஸிட்டவுன் ஸார்

மற்றவர் : கொண்டுவா நீ ஸ்பெஷலாய்
கப் காபி ஸாஸருடனே
வேண்டும் அம்பி எனக்கோர்
கப் ஓவல் டின்னே ஜல்தி

ராஜு : வந்தனம்

சண்டி : போதுமா

ராஜா & சண்டி : வேறெதுவும் வேண்டாமோ
ப்ளீஸ் டியர் ஸார் பில் இதோ

பாப்பாயி : அடிக்கடியும் வர வேண்டுமே
குட் ஈவினிங் குட் ஈவினிங்

மற்றவர் : வருகிறோம் போய் வருகிறோம் போய்

## 12. ஸாது

செல்வமே செல்வமே செல்வமே செல்வமே
பணமே கடவுளாய் எண்ணியே
பிறவி பாழ்படுவார்
வாழ்வு பாழாய் ஆருயிர் விடும்நாள்
ஊசியும் வருவதில்லை (பணமே)

துஷ்டர் அல்பர் உறவை அடுப்பாய்
சுந்தமர் கண்டால் ஓட்டம் எடுப்பாய்
பாவ புண்யம் துணையே அல்லால்
நீ துணை வருவாயோ (பணமே)

## 13. ராஜு, காமதேனு, அனுராதா & ஸாது

ராஜு : அன்னையும் தெய்வமும் நீயே உடன்
நீ அருள்வாய் தாயே (அன்)

காமு : உனையே நாள் பணிவோமே
கோவே எங்க ளுயிர்க்கன்பே

ராஜு }
காமு : } அன்னையும் தெய்வமும் நீயே—உடன்
நீ அருள்வாய் தாயே

தொகையரு

அனுராதா : ஏழை யென் வாழ்வில்—இன்பமும் உண்டோ
ஆறுதல் பெறவழி காணேன்—தெய்வமும் இல்லையோ

பாட்டு

உயிர் வாடி கால்கள் தள்ளாடுதே
உடல் உளமும் சுழல மெய்வாடுதே
செல்வ தெங்கே லோக மெங்கும்
பெரும் காரிருள் சூழ்ந்த தாலே

ஸாது : புவி வாழ்விது துன்பந்தான் முடிவில்
உயர் ஞான மடைந்தால் இன்புறுவாய
ஜகந் நாதனையே துதிப்பாய்

## 14. காமதேனு & ராஜு

காமதேனு : கொண்டு வந்தா லுபகாரம் உண்டு
குடம் கொண்டு ஜலம் மொண்டு

ராஜு : தங்காய் போகிறாய் நீதனி யெங்கே

காமதேனு : பூங்குளமே போய் வருவேனே
குடம் கொண்டு ஜலம் மொண்டு

ராஜு : அட பைத்தியம் என் உடைத்தாயே

காமதேனு : பரிஹாஸம் செய்யவோ இங்கு வந்தாய் இது
ஸரியோ போதும் போதம்

ராஜு : கோபமும் ஏனோ நான் பரிஹாஸம் செய்வேனோ

காமதேனு : போடா

ராஜு : அழ வேண்டாம் தங்காய் இனி நானும்
துணையாவேன்

காமதேனு & ராஜு : சேர்ந்து வேலைகள் செய்ய நாம் போவோம்
தாயிடமே நாமிரு வோரும்

## 15. காமதேனு, ராஜு & குடி ஜனங்கள்

காமதேனு : அன்னை சொன்னபடியே
போய் வருவேன் போய் வருவேன்
நான் வெகுதூரம் வெளியூர் (அன்னை)

ராஜு : நானும் உன்னுடன் வந்திடுவேன்

காமதேனு : உன்னை யாரு அழைத்து வருவார்

ராஜு : எப்போ திரும்புவாய்

குடிகள் : உன்னைப் பிரிந்தென் செய்குவோம்

காமதேனு : அங்கே போனாலும் செய்வேன் அன்புடன்
ஏழைகளுக் கூழியம்

குடிகள் : மகிழ்வுடன் சென்று வா

காமதேனு : ஜகதீசன் உள்ளம்போல் ஆகுமே

குடிகள் : எங்கள் உள்ள ஆலயத்தே
வாழும் குழந்தையே நீ சென்றுவா

காமதேனு : ஆசியுடன் ஈசன் துணை
குடிகள் : மாசில் குழந்தையே நீ சென்றுவா

## 16. காமதேனு & குடி ஜனங்கள்

காமதேனு : ஒளிபெறவே இருள் அறவே
உதய காலமு மிதுவே
தெளிவுடன் கோலமிட்டழகாய்
தெருவையும் அலங்கரித்தனரே
வீதி தோறும் சிறுவர் விரைவுடன்
குதித்துக் களித்து வருவார்
கண்மணி கனிரஸமே—இனி கண்வளர்ந்திடு நீயே
தாவித்துள்ளும் ஆவின்கன்று தாயுடன் அழகாய்
புவியில் யிதனை பூஜை செய்திட பொருந்தும் புண்ணியமே
ஓஹோஹோ ஓஹோஹோ
ஈதேது ஓர் கூட்டம் போகுதே

ஜனங்கள்: பாரீர் சங்கொலி கேட்டீரோ
அது தானழைத்திடுதே
நலமாய் உழைத்திடவே
இது நாமும் இத்தினமே
பலவித துறைகளில் பலமுடன் நலம்பெற
பாரில் முற்றிலுமே
எல்லோரும் வெற்றி பெற
இது வாகும் நற்றினமே

## 17. (காமதேனு) காற்றூடி டான்ஸ் பாட்டு

அதிவேக மாகவே தான் பறந் தோடிடுதே
பலே காத்தாடி
கதிர்மணி போலே காணுது மேலே
கஹனமேவிப் போய் நீ வா வா
கபடே அறவே தனியே

தொகையறு

தெரியாதாஹா யேகினதே
காணேனே நானே
காணுனையே—இனி விடுவேனோ கைதவறவே

பாட்டு

மனோ வேகமதா யோடி நீ
வளர் பிறை போலே கூடி
வடிவுடன் நூலை நான் விட
வாகாய் நீதான் போவாய் வானிலே
மாறிடாதே தினமே மாலையிலாடிடுவோம் (அதிவேக)

## அனுராதா, சந்திரமோஹன், காமதேனு, ஜமீன்தார் முதலியோர்

அனுராதா : சுப காலமிதே

சந்திரமோஹன் : ஸகலமும் சுகிர்த பலமுமாம்

காமதேனு : இந்நாள் பிரிந்தென்னை மறந்ததும் தந்தையே தகுமோ

அனு & சந்திர : கடவுள் செயல் இனி வருந்தாதே
பிரியோம் இனி நாம்

அனுராதா : எழில் மழை வண்ணன் கண்ணன் குழலிசை
கேளிர்

சந், அனு, காமு : மங்கள மென்று மினி

சந்திர : அனுராதா

சந், அனு, காமு : இளங் கொடியும் மாமு மென

அனுராதா : ஓர் கணமு மினிமேல்

சந்திர : இணை பிரிவ தில்லையே

சந், அனு, காமு : வெயிலின் கொடுமையை நிழலி லடைந்தோம்

அனுராதா : மறந்திடு வோமினி

சந், காமு, அனு : ஆனந்தம் மேல் ஆனந்தம் காண்

ஜமீன்தார், மற்றவர் : எல்லாம் இறைவன் அருள் அனுராதா
பன்னெடு நாள் வாழ்ந்திடுவீர்
ஜெய ஜெய ஜெய ஜெய்
உலகு புகழ்ந் திடவே

சுபம் !

Ananda Vikatan Press, Madras II-Ed.—50M-Apr. 41